6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

ஏதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

168. கோரிக்கை எண் 1—நில வரி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

169. கோரிக்கை எண் 9—நிறுவன நிதிப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

170. வருவாய்த்துறை பற்றிய சாதனை அறிக்கை, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்புகள்.

(689 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

வருவாய்த் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு—1987-88.

1. முன்னுரை.

1980 டிசம்பரில் வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்னர். வருவாய் நிர்வாகம், நிலம், நிலச் சீர்திருத்தத்துறை நிர்வாகம் தனித்தனியே குறித்த பணிகளைக் கவனிக்கும் மூன்று ஆணையர்களிடம் மாநில அளவில் சிறப்பு ஆணையாளர்—வருவாய் நிர்வாக ஆணையாளர், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையாளர், சிறப்பு ஆணையாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையாளர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டன. வருவாய் நிருவாகத்துறை, மாவட்ட வருவாய் நிருவாகத்திற்கும் பொது நிருவாகத்திற்கும் பொறுப்பானதாகும். நிலவரி, செஸ், அவை தொடர்பாக வரிகள் ஆகியவற்றை விதித்தல், வசூலித்தல் நிலங்கள் வருவாய் ஆவணங்களை பாதுகாப்பது ஆகியவை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நில நிருவாகத்துறை, நிலம் கையகப்படுத்தல், நில உரிமை மாற்றம் செய்தல், வீட்டு மனைகளை ஒப்படை செய்தல், நிலப் பட்டாக்களை வழங்குதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாகும். நிலச் சீர்திருத்தம், குத்தகைச் சீர்திருத்தம் ஆகியவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பு நிலச் சீர்திருத்தத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட வருவாய் அதிகாரிகளும் நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், வருவாய் நிர்வாகம், ஆகியவை தொடர்பான பணிகளைக் கவனிக்கின்றனர். வருவாய்க் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அதிகாரிகள் ஆகியோர் அப்பணியில் அவர்கட்கு உதவுகின்றனர் இந்திய விடுதலைக்குப் பின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம்,